# தமிழ் மொழியின் சிறப்புகள்

***சு.லி. ஜினிமேபல்***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
பெதஸ்தா கல்வியியல் கல்லூரி, பெத்தலகேம்
கன்னியாகுமாரி

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5025

***முன்னுரை***

மொழி என்பது மக்களின் எண்ணங்களை வெளியிடுவதற்கும், கருத்துக்களை பகிர்ந்து கொள்வதற்கும் ஒரு பாலமாக அமைவதோடு மட்டுமல்லாமல், தனக்குள் காணப்படும் படைப்பாற்றலையும் வெளிப்படுத்த ஒரு ஊக்கியாக செயல்படுகிறது. ஒரு மனிதன் பிறப்பு முதல் இறப்பு எம்மொழி வாயிலாக சிறப்புமிக்க காரியங்களைச் செய்கிறானோ அதுவே அவனது தாய்மொழியாகக் காணப்படுகிறது. ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொரு சிறப்பு உண்டு. ஆனால் தமிழ்மொழி இன்றளவும் உலகளவில் போற்றப்படுவதற்கு காரணம் அம்மொழியின் தனித்தன்மைகள் தான். அவ்வகையில் இக்கட்டுரையானது தமிழ்மொழியின் சிறப்புகள் குறித்து எடுத்துரைக்கின்றது.

***தமிழ்மொழி குறித்து அறிஞர்களின் கருத்து***

தமிழின் சிறப்புகளில் ஒன்றாகக் கால்டுவெல்லின் கருத்தும் கூறுவது பொருத்தமாகும். கால்டுவெல் தமது திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலில் பண்டைத் திராவிடர்கள் நாகரிகத்திற்கே முன்னோடியாக விளங்கியுள்ளனர் என்று கூறுகிறார். மேலும் பழைய ஈப்ரு மொழியுடைய விவிலிய நூலில் "தோகை, அகில்" முதலான தமிழ்ச் சொற்கள் இருப்பதை எடுத்துக்காட்டியுள்ளார். அவற்றைக் கண்டு தமிழின் பழமையுணர்ந்து வியந்த வடமொழிப் பேராசிரியரான மாக்ஸ்முல்லர் இச்சொல்லாராய்ச்சி உண் மையாகுமானால் ஆரியக் குடியினர் இவ்விந்திய பழமையினை உறுதிப்படுத்துவதற்கு அது சிறந்ததொரு கருவியாகும் என்று கூறுகிறார். இவரைத் தொடர்ந்து ஸ்லேட்டர் என்பவரும் திராவிட நாகரிகமே சிறந்தது என மொழிந்துள்ளார்.

"தமிழ் கிரேக்க மொழியினும் நயமான செய்யுள் நடையுடையது லத்தீன் மொழியினும் புரணமானது" என்று வின்ஸ்லோவும் "மனிதராற் பேசப்படுகின்ற மிகப் பொலிவும் திருத்தமும் சீருடைய மொழிகளுள் தமிழும் ஒன்று" என்று டெய்லர் என்பவரும் தமிழைச் சிறப்பித்துள்ளனர்.

சமஸ்கிருதம், எபிரேயம், கிரேக்கம் என்னும் மூன்று உலக இலக்கிய மொழிகளுள் தமிழ்ச்சொற்கள் காணப்படுகின்றன என்று ரைஸ் டேவிட்ஸ் கூறுகின்றார். வடஇந்தியாவில் வாழ்ந்த மொகஞ்சதாரோ மக்கள் திராவிட மொழியையே வழங்கினார்கள். அவர்கள் வழங்கிய சொற்கள் பெரிதும் தமிழில் காணக்கிடைக்கின்றன. இப்பொழுது வழங்கும் மொழிகள் எல்லாவற்றிள்ளும் தமிழ் மிகப் பழமையுடைதென்னும் கொள்கையை இது வலியுறுத்துகின்றது. மொகஞ்சதாரோ என்னும் இடத்தில் சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன் வழங்கிய மொழியில் தமிழ்ச்சொற்கள் நிறைந்துள்ளன எனப் பாரதியார் ஹீராஸ் கூறுகின்றார்.

கிறித்தவ அருள் தொண்டரான ஜி.யு.போப் என்பவராலும் தமிழ் ஆராயப் பெற்றது. கிறிஸ்தவப் பணி செய்ய 1839ல் தமிழ்நாட்டிற்கு வந்த போப் அவர்கள் தமிழை முறையாகக் கற்றுள்ளார். திருக்குறளையும், திருவாசகத்தையும், நாலடியாரையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தமிழின் பெருமையை மேல்நாட்டில் பரப்பினார். சிவஞான போதத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். எப்போதும் ஒரு தமிழ் மாணவனாக இருக்கவும் விரும்பியுள்ளார்.

## முதல் இலக்கணம்

உலக மொழிகளில் எழுந்த முதல் மொழி இலக்கண நூல் தொல்காப்பியம் 3000 ஆண்டு பழமையுடையது. இவற்றின் இலக்கணக் கோட்பாடுகளைக் கண்டு இன்றைய மொழியலுகம் வியப்பால் திகைக்கிறது என்பதும் பெருமையே. குறிப்பாகத் தமிழ் மொழியின் எழுத்துகள் பிறப்பினைத் தொல்காப்பியர் விளக்கியுள்ள பாங்கு கண்டு டாக்டர் எமினோ அவர்கள் இன்றைய மொழியியல் துறையும் மொழியலாளர்கள் தொல்காப்பிய எழுத்துப் பிறப்பினை அப்படியே பேணிப் பின்பற்றத் தக்க முறையில் விளங்குகிறது என்று கூறியுள்ளது தமிழின் இலக்கணச் சிறப்பைக் காட்டுகிறது. தமிழில் உள்ள ஒலிகளின் மொத்த எண்ணிக்கை சுமார் 500 என்று மொழியியல் வல்லுநர்கள் கணித்துள்ளனர். உலகில் வேறு எந்த மொழியிலும் இந்த அளவுக்கு ஒலி எண்ணிக்கைகள் இல்லை என்கின்றனர். சாதாரணமாக ஒரு மொழிக்கு 33 ஒலிகள் இருந்தாலே போதும் ஆனால் தமிழின் சிறப்பு 500 ஒலிகள் இருப்பதால் எந்த உணர்வையும் கருத்தையும் வெளிப்படுத்த முடியும். யாதும் ஊரே யாவரும் கேளிர், ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற உயர்ந்த தத்துவச் சிந்தனையுடைய மொழி தமிழ் மொழி.

## தனித்தமிழ் இலக்கியங்கள்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த தமிழ் புலவர் அனைவரும் தமிழ்மொழியில் அயல்மொழிச் சொற்கள் புகுந்து விரவுதற்கு இடங்கொடாமல் இலக்கண இலக்கிய வரம்புகளோடும் தாமும் தனித்தமிழிலேயே நூல்கள் இயற்றி ஒற்றுமையுடன் நின்று கண்ணுங்கருத்துமாய்ப் பாதுகாத்து வந்துள்ளனர். நம் பண்டையாசிரியர் இயற்றியருளிய நூல்களில் செல்லுக்கும் (கறையான்) ஆடிப்பெருக்கிற்கும் இரையாகிப் போன எண்ணிறந்த நூல்கள் ஒழிய எஞ்சியதே இன்று நம் கையில் கிடைக்கின்றது.

தொல்காப்பியம், பரிபாடல், இறையனார் அகப்பொருளுரை, அகநானூறு, புறநானூறு, கலித்தொகை, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பத்துப் பாட்டு, திருக்குறள் முதலான அருந்தமிழ் நூல்களைச் சிறிதளவேனும் உற்று நோக்கும் போது பண்டை ஆசிரியரின் பணி எவ்வளவு மகத்தானது என அறிய இயலுகிறது. சிலப்பதிகாரம், மணிமேகலை, திருவாசகம், திருக்கோவையார் போன்ற விழுமிய நூல்களும் தனித்தமிழுடைய இலக்கியங்களே.

### தமிழின் சொல்நயம்

தமிழ் மொழியில் சொற்கள் ஒரு லட்சத்திற்கும் மேலாக இருக்கின்றன. அரி என்னும் சொல்லுக்கு மட்டும் 59 பொருட்கள் இருக்கின்றன. அவை யாவும் தூய தமிழ்ச் சொற்களே. பிறமொழிகளில் இல்லாத அளவுக்கு சொல் பாகுபாடு தமிழில் உண்டு. மலர் என்ற சொல்லுக்கு ஆங்கிலத்தில் குடழறநச என்ற ஒரு சொல்லே உண்டு. ஆனால் தமிழில் மலரின் ஒவ்வொரு வளர்ச்சி நிலையையும் காட்டுவதாகப் பல சொற்கள் இருக்கின்றன. அலர் - அரும்பு -நனை -போது - மலர் - மொட்டு - வீ என ஒவ்வொரு நிலைக்கும் சொல் அமைப்பை நம் முன்னோர்கள் உருவாக்கியிருப்பது தமிழின் சிறப்பைக் காட்டுகிறது.

### தமிழ்மொழி கலைமகளுக்கு வலது விழி

ஆரியம் மொழி போல் உலக வழக்கு அறிந்து ஒழிந்து சிதையாமல் சீரிளமை குன்றாமல் இருக்கும் உயர்தனிச் செம்மொழி தமிழ்மொழியாகும். இம்மொழி கலைமகளுக்கு வலது வழியாக விளங்குகிறதென்று உரைக்கின்றார் மனோன்மணிய ஆசிரியர்.

**"கலைமகள் புர்வதிசை**
**காணுங்கால் அவள்விழியுள்**
**வலதுவிழி தென்மொழியா**
**மதியாரோ மதியுடையார்?"**

அறிவுடைய பெருமக்கள் கலைமகளுக்கு வலது விழியாக இருப்பது தமிழே எனக் கூறுவர்.

### பாரதி கூறும் பைந்தமிழ்ச் சிறப்பு

தமிழ் மொழிதான் தாமறிந்த மொழிகளிலெல்லாம் தலையானது "தனிச்சிறப்புடையது. தணியா இன்பம் பயக்கவல்லது" தமிழை நினைத்தாலும் இன்பம் "பேசினாலும் இன்பம் கேட்டாலும் இன்பம்" செந்தமிழ் நாடென்று சொன்னாலே இன்பத் தேன்வந்து பாயுதாம் காதினிலே!

**"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்**
**இனிதாவது எங்கும் காணோம்"**

என்ற பாடியுள்ளார்.

### பாரதிதாசனின் தொன்மைக் கருத்து

**"திங்களோடும் செழும்பரிதி தன்னோடும்**
**விண்ணோடும் உடுக்களோடும்**
**மங்குகடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன்**
**பிறந்தோம் நாங்கள்"**

என்று தமிழின் தொன்மையையும், "தமிழுக்கு அமுது என்று பேர் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் மொழிப் பற்றினைப் பாடுகின்றார்.

### முடிவுரை

பண்டைக் காலந்தொட்டு நூல் வழக்கினும் உலக வழக்கினும் திருத்தமடைந்து மக்களறிவின் முதிர்ச்சிக்குப் பெரிதும் உதவி செய்த பழைய மொழிகள் சிலவே. இப்பழைய மொழிகளுள் தமிழ்மொழியைத் தவிர பெரும்பாலான மொழிகள் உலக வழக்கின்றி இறந்தொழிந்தன. செந்தமிழ் மொழியாகியத் தமிழ் எத்தனையோ ஆயிரம் ஆண்டுகள் கழிந்தும் தன் இளமை கெடாது கழிபெரு மகிழ்ச்சியோடு உலவி வருகிறது. இவற்றை உற்றுநோக்கும்போது இதனைப் பேசி வந்த நன் மக்கள் எவ்வளவு நுண்ணறிவும் நாகரிகமும் உடையவர்களாக இருந்திருக்க வேண்டும் என்பதை அறிவதோடு மட்டுமல்லாமல் உணரவும் வேண்டும்.

### துணைநின்ற நூல்கள்


1. கே.கே.பிள்ளை தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும்
2. எஸ்.ராமகிருஷ்ணன் எனது இந்தியா
3. ச.சாமிமுத்து தமிழ் இலக்கிய வரலாறு
4. மறைமலையடிகள் முற்கால பிற்காலத் தமிழ்ப்புலவோர்